DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.
S.C. No.75/2024
P.W. 10 (LW.9)

| | | |
|---|---|---|
| பெயர் | : | குமணன் |
| தந்தை பெயர் | : | அசோக் |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Assistant in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 09.09.2025.
(எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்)

முதல் விசாரணை :–

நான் தற்சமயம் கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.06.2023ம் தேதி காலை சுமார் 4 மணியளவில் சுமார் 51 வயதுள்ள கணேசன், த/பெ.சிக்கு கவுண்டர், அவர்கள் 14.06.2023ம் தேதி காலை சுமார் 8.30 மணியளவில் நாமக்கல் மாவட்டம் பவித்திரத்தில் தனது சொந்த சகோதரருடன் ஏற்பட்ட தகராறின் போது அரிவாள் கொண்டு தாக்கப்பட்டதாகவும், அதனால் இடது முனைப்பகுதி கையில் ஆழமான காயம் ஏற்பட்டதாகவும், நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு முதலில் சென்று மேற்படி காயத்திற்கு தையல் போடப்பட்டு, பின்னர் கங்கா மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக வந்தார். அவரை பரிசோதனை செய்த போது நோயாளி சுயநினைவுடன் இருந்தார். அவருடைய ரத்த ஓட்டம் சீராக இருந்தது. இடது முழங்கையில் உள் பகுதியில் சதை கிழிந்தும், அழுக்குடன் கூடிய விரல்களை மடக்கும் தண்டுகளும் (Flexor Tendons) மற்றும் palmaris longus தசைகள் வெட்டுப்பட்டு தோல் தனித்தாளாக தென்பட்ட காயம் காணப்பட்டது. நான் பார்த்த போது உடலில் வேறு காயங்கள் எதுவும் இல்லை. மேற்படி நபருக்கு, மேற்படி காயத்திற்கு எக்ஸ்ரே எடுத்து

பார்த்த போது எலும்பு முறிவு எதுவும் காணப்பட்டவில்லை. மேற்படி நபர், மேற்படி தேதியில் அவசர சிகிச்சை அறுவை அரங்கில் மயக்க மருந்து கொடுக்கப்பட்டு மேற்படி காயம் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, தோல் தையல் போடப்பட்டு இடது கையில் ரேடியல் மற்றும் அல்னா தோல் குறைபாடுகள் இருந்தமையால் அவரது வலது தொடையில் இருந்து தோல் எடுக்கப்பட்டு மேற்படி பகுதியில் ஒட்டு தோல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு கட்டு போடப்பட்டது. மறுநாள் அதாவது 16.06.2023ம் தேதி காலை சுமார் 9.30 மணியளவில் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்பட்ட மேற்கூறிய காயம் கொடுங்காயம் என்று குறிப்பிட்டு என்னால் சான்று அளிக்கப்பட்டது. மேற்படி நபர் கங்கா மருத்துவமனையில் 15.06.2023ம் தேதி சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டதற்கான விபத்து பதிவேடு தான் தற்சமயம் என்னிடம் காட்டப்படுவது. அது அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபருக்கு என்னால் வழங்கப்பட்ட காயச்சான்று அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் இது குறித்து என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

21.07.2023ம் தேதி காவல் ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பெற்றார். 15.06.2023ம் தேதி அதிகாலை சுமார் 4 மணியில் இருந்து 16.06.2023ம் தேதி காலை சுமார் 9.30 மணி வரையிலும் தான் மேற்படி கங்கா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். மேற்படி சமயத்தில், மேற்படி நபரை நான் பரிசோதித்து சிகிச்சை அளித்த போது வேறு காயங்கள் ஏதேனும் உள்ளதா என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். வேறு காயங்கள் எதுவும் இல்லை. மேற்படி நபருக்கு, மேற்படி ஒரே காயம் தான் காணப்பட்டது என்றால் சரிதான். கொடுங்காயம் என்பதற்கான வரையறை தெரிந்து தான், மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று கருத்துரை வழங்கினேனா என்றால் ஆமாம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது ஆயுதங்கள் எதையும் காட்டி மேற்படி ஆயுதத்தால், மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்று விசாரித்தாரா என்றால் இல்லை. மேற்படி காயம் அரிவாளால் வெட்டப்பட்டதா அல்லது அரிவாளால் சீவப்பட்டதால் ஏற்பட்ட காயமா என்றால் மேற்படி

காயம் அரிவாளால் வெட்டும் போது தடுப்பதால் ஏற்பட வாய்ப்புண்டு.

(மறுவிசாரணை – இல்லை)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல
என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு
படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு
என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து
இட்டார்.

A SHANMUGAPRIYA

Digitally signed by A SHANMUGAPRIYA
Date: 2025.09.09 19:32:14 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்